# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண்.6/2016 நாள் 03.08.2016

### வாக்காளர் பதிவு அலுவலர்கள் நியமனம்

2006ம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தேர்தல் விதிகள், விதி எண்.8ன் கீழ் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், கீழ்க்கண்ட அலுவலர்களை வாக்காளர் பதிவு அலுவலர்களாக (Electoral Registration Officers) நியமனம் செய்து சட்ட பூர்வ ஆணை எண்.3/2016/தநாமாதேஆ/நதே 1, நாள் 02.08.2016ன்படி உத்தரவிட்டுள்ளது.

| | |
|---|---|
| அனைத்து பேரூராட்சிகள் : | சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் அல்லது மாநில தேர்தல் அலுவலர் / மாவட்ட தேர்தல் அலுவலரால் நியமிக்கப்படும் உரிய அலுவலர் |
| அனைத்து நகராட்சிகள் : | சம்பந்தப்பட்ட நகராட்சிகளின் ஆணையாளர்கள் |
| சென்னை மாநகராட்சி : | வருவாய் அலுவலர் |
| மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகள் | சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் |

மாநில தேர்தல் அலுவலர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களின் கண்காணிப்புக்குட்பட்டு இவ்வாக்காளர் பதிவு அலுவலர்கள் தங்களுடைய அதிகார எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளைப் பொறுத்த வரையில், புகைப்படத்துடன் கூடிய வார்டுவாரியான வாக்காளர் பட்டியல் தயார் செய்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வார்கள்.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

03/08/16

மக்கள் தொடர்பு அலுவலர்